சண்முகநாதன்.

SANMUKANATHAN.

பத்திரவிகிதம்
உள்ளூருக்குவருஷ-க்கு ரூபா 1 50
வெளியூருக்குவருஷ-க்கு ரூபா 2-00
தொலைவாய்ப் பகுதிக்கு
வருஷ-க்கு 2-50.
தனிப்பிரதி சதம் 6.

மாசமிருமுறை பிரகடனமாகும்.

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை போற்றி யொழுகப்படும்.

விளம்பர விகிதம்
முதன்முறைக்கு—
ஒருகலத்துக்கு 7-50
அரைக்கலத்துக்கு 4-00
கால்கலத்துக்கு 2-00
வரி 1-க்கு
அடுத்தமுறைக்கு ஷெ அரைவாசி

மலர் ச. } யாழ்ப்பாணம், ஆனந்த வருஷ புரட்டாதி மீ ரூஉ (21-9-14) { இதழ் எ.

உ

குகமயம்.

சங்கரன்றன் சால்பினுறுஞ் சண்முகநாதன் பெயரோ, டிங்கிதமாம் பத்திரமு மெந்நாளுந்— துங்கமுடன், உன்னரிய நன்னிலைமை யுற்றெங்கும் பல்கியிட வன்னவளருளே துணையாம்.

நூதனபதிப்பு.

ஆறுமுகநாவலர் அவர்கள்

இயற்றிய

தனிப்பாமாலை.

(o)

அவர்கள் சரித்திரச்சுருக்கத்துடனும் 7÷5½ அங்குலம்பிரமாணங்கொண்ட அழகிய அவர்கள் பிரதிமைப்படத்துடனும் விலை சதம் 50 (8-அணா)

கிரமவேன் சங்கீதத்திரட்டு.

கிரமவேன் வைத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் மிகப் பிரயோசனமானது.

விலை ரூ 1-50.

வி. பி. தபாற்செலவுகள் பிரத்தியேகம்.

10-பிரதிகள் எடுப்போர்க்கு ஒன்று கழிவாகக் கொடுக்கப்படும்,

C. VELAUTHAN.
NO 38 NEW CHETTY STREET
COLOMBO.

கியாத நாதமணி

இதுகண்ணைக்கவரும் இலட்சணம் வாய்ந்துள்ளது அமெரிக்கன் மணியை மயக்குமினிய நாதமுடையது ஆங்கிலேயர் முதலிய பலராலுமடித்துப் பரீட்சித்து மகிழ்ந்து பாராட்டப்பட்டுள்ளது ஏனையவிடங்களிற் பெறத்தகும் விலைக்குக் குறைத்தே கொடுக்கத்தக்கது சாதாரண அளவுள்ள மணிகள் உடனே கொடுக்கத்தக்கதாக எப்பொழுதும் எங்களிடத்திருக்கின்றது

ஆ. சிவக்கொழுந்து
மனேஜர்
எஸ். செல்லப்பா அன்ஸன்ஸ்
நல்லூர் யாழ்ப்பாணம்.

அடைவு நகை விற்பனவு விளம்பரம்.

கஅகூங-ம் ஆண்டின் எட்டாமிலக்கச் சட்டத்தின்படி லைசென்சு பெற்ற அடைவுபிடிக்கும் வண்கிழக்கு வே. தாமோதரம்பிள்ளையிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போதவணைதப்பி மேற்படி சட்டத்தின் கஉ-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்

நம்பர்	ரூ. ச	மீ	அடைவுவைத்தவரின்பெயர் ஊரும்	நகைகளின் விபரம்
1649	5 ,	ஆனி	க. சின்னவர்	திருநெல்வேலி சிமிக்கிவாளிசோடி 1
1679	5 4	ஆனி	மு. தம்பிப்பிள்ளை	ஆனைக்கோட்டை கல்மோதிரம் 1
1702	7 4	ஆனி	கா. இராமு	கந்தமடம் குவளைக்கடுக்கன் சோடி 1
1794	8 4	ஆடி	ப. கந்தையா	ஆரியகுளம் நாட்டுக்கடுக்கன்சோடி 1
1838	20 4	ஆடி	வை. செல்லப்பா	கந்தர்மடம் பொன்தாலிக்கொடி 1
1856	15 4	ஆடி	க. கந்தையா	சின்னமடத்தடி கல்காதோலைசோடி 1
1870	5 4	ஆடி	க. சின்னத்தம்பி	கந்தர்மடம் சிமிக்கிவாளிசோடி 1
1876	20 4	ஆவணி	சி. சீனி	கந்தர்மடம் காதோலை சோடி 1
1882	5 4	ஆவணி	ச. முத்துக்குமாரு	வண்கிழக்கு பின்கோர்க்கி 1
1886	5 4	ஆவணி	க. சின்னன்	ஆனைபந்தியடி கல்பதக்கம் 1
1890	13 4	ஆவணி	ம. கார்த்திகேசு	நல்லூர் பொன்தாலி 1
1899	5 4	ஆவணி	பொ. மாணிக்கம்	கோண்டாவில் பொன்மோதிரம் 1
1901	10 4	ஆவணி	நா. பண்டாரம்	கந்தர்மடம் நீலக்கல்மோதிரம் 1
1908	10 4	ஆவணி	வை. தங்கம்	சந்தர்மடம பின்கோர்க்கி 1 பதக்கம் 1
1916	19 54	ஆவணி	க. வைத்திலிங்கம்	திருநெல்வேலி கொண்டைப்பூ 1
1922	20 4	ஆவணி	சி. இராசையா	கந்தர்மடம் கல்வாழி சோடி 1
1924	22 4	ஆவணி	மு. நாகமணி	ஆனைக்கோட்டை சறட்டட்டியல் 1
1928	6 4	ஆவணி	க. கதிராசி	கந்தர்மடம் சிமிக்கிவாழி சோடி 1
1940	17 4	ஆவணி	பொ. மாணிக்கம்	கோண்டாவில் அச்சரக்கூடு 1
1945	15 4	ஆவணி	இ. துரையப்பா	வண்மேற்கு அச்சரக்கூடு 1

விற்பனவு 1914-ம் ஆண்டு அக்டோபர் மீ 3ந்உ திகதிக்குச் சரியான ஆநந்தவருஷ புரட்டாதிமீ கஎஉ சனிக்கிழமை பகல் பத்துமணியளவில் மேற்படிபிள்ளையவர்களின் பண்டகசாலையில்பிரசித்தஏலத்தில் விற்கப்படும

வெந்திஸ் மேஸ்த்தர் அ. ரு. செல்லையா, உடையார்

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி

காஷ்மீர பட்டுகளென்ற காசிபட்டுதினுசுகள்

திருப்தியில்லாத சரக்குகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வோம

பீதாம்பர பட்டு சேலைகள்.

(1) கசு முழம் நீளம், உஇ முழம் அகலம். விளிம்பும் முந்தியும் சரிகை. பூவேலைகள் உடல் சாதா. சேலை க-க்கு ரூபா உ0 முதல் இ0 வரை,

(உ) கசு முழம் நீளம், உஇ முழம் அகலம். மேலேகண்டபடி விளிம்பு முந்தி வேலைகளும்உடலிலும் சரிகை புட்டா போட்டது. சேலை க-க்கு விலை ரூபா உகு முதல இ0, க00 வரை.

மதனப்பூர் சேலைகள்.

(க) கசு முழம் உஇ அகலம் விளிம்புமுந்தி சரிகைவேலைகள் உடல சாதா. உருப்படி க-க்கு விலை ரூபா உ0 முதல இ0 வரை, உடல புட்டா சேலை உருப்படி க-க்கு விலை ரூபா உகு முதல இ0, க00 வரை,

(உ) வாஸ்கட் சேலைகள் கசு முழம் உஇ அகலம் பட்டினுலேயே உடலில பட்டு பூவேலைசெய்தது. விளிம்பு சருகை வேலைமுந்தியில பிரகாசமான ஜாதளப்பு முந்தி சேலை க-க்கு விலை ரூபா உகு முதல இ0 வரை.

பீதாம்பரம் அல்லது மதனப்பூர் ரவிக்கை.

(க) உடலசாதா விளிம்புமுந்தி ஜரிகை வேலையுள்ளது ரவிக்கை க-க்கு ரூபா உ முதல க0 வரை.

(உ) உடலிலும் ஜரிகையினுல பூக்கள் புட்டா போட்டது. ரவிக்கை க-க்கு உ-அ-0 முதல கஇ வரை.

மதனப்பூர் பட்டு தாவணிகள்.

மேற்படி சு, அ, க0, கஉ முழம் நீளம் உள்ளது- உடலிலும் ஜரிகையினுல பூக்கள் புட்டாக்கள் போட்டது. உருப்படி க-க்கு ரூபா கஉ முதல கஇ, உ0, உஇ, ரு0 வரை.

துப்பட்டாக்கள்.

பீதாம்பரம் அல்லது மதனப்புரா.

சு முழம் நீளம் உஇ முழம் அகலம் உடல சாதா விளிம்பு முந்தி ஜரிகைவேலைகள் உருப்படி க-க்கு ரூபா அ முதல உஇ வரை.

மேலேகண்டபடி சு முழம் நீளம் உ முழம் அகலம் உடலிலும் ஜரிகைபூக்கள் புட்டாக்கள் போட்டது, துப்பட்டா க-க்கு ரூபா க முதல க0, கஉ, கஇ, உஇ, ரு0 வரை.

சவுக்கங்கள்.

(க) உஇ முழம் நீளம் உஇ முழம் அகலம் சுற்றிலும் விளிம்பு முந்திகளில ஜரிகை பூவேலைகள் நாலுமூலையிலும் சரிகை மாங்காய் மத்தியிலும் சரிகையால கமலம், சவுக்கம் க-க்கு ரூபா இ முதல கஇ வரை

(உ) ஷெ அகலம் ஷெ நீளம் உடலிலும் சரிகையினுல பூக்கள் புட்டா போட்டது. உருப்படி க-க்கு எ முதல கஇ வரை.

(ந) கஇ-கஇ முழம் விளிம்புமுந்தி சரிகை நாலுமூலையிலும் மாங்காய், உடல சாதா உருப்படி க-க்கு ரூபா உ-அ-0 முதல ச வரை.

(ச) ஷெ நீளம் மேற்படி அகலம் உடலிலும் சரிகை புட்டாக்கள் உருப்படி க-க்கு ரூபா ந முதல இ வரை

ஜரிகை யில்லாத பட்டுச் சேலைகள்.

உருத்திராக்ஷக்கரை பட்டைக்கரை போட்ட சேலைகள் வெள்ளை, சிவப்பு, ஊதா, பச்சை முதலிய எந்த நிறத்திலும் கிடைக்கும் கஅ முழம் சேலை க-க்கு ரூபா முதல கஉஇ வரை.

வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் கோயம்புத்தூர் சேலம் வேட்டிகள் மாதிரிக்கம்பி, ருத்ராக்ஷகம்பி, சரிகைக்கம்பிபோட்டவை

முழம்	அகலம்	ரூபா	முதல	வரை
ச	உ	சஇ	,,	எ
சு	உஇ	எ	,,	சு
சு	ந	க0	,,	கஉ
எ	உஇ	அ	,,	கஉ
எ	ந	க0	,,	கச
அ	ந	கஉ	,,	கஅ
கூ	ந	கரு	,,	உ0
க0	ந	கஇ	,,	உஉ

குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால செய்த செப்பு, குடம், கரண்டி முதல் நஉ சமான்கள் அடங்கிய அழகிய சேர்த்தியுள்ள கை சுமப்பனையுள்ள அழகிய பாத்திரங்கள் கட்டுள்ளசிறுசெட்டு க-க்கு ரூபா உ
பெரிய ,, ,, ச.

உடனே எழுதுங்கள்

உருத்திராக்ஷங்கள் ஜபமாலைகள்!

பரிசுத்தமானது.

க0அ உள்ள மாலை க-க்கு சு அணா முதல் ரூபா கஉ வரை. விலை அதிகமாயிருந்தால் போல மணிகள் சிறிதாகஇருக்கும் சு முகக்கண்டிகள் நந உள்ளது க-க்கு ரூபா க முதல் க0 வரை. இ முகக்கண்டி நஉ உள்ளது கண்டி க-க்கு அணா முதல் ரூபா [illegible] வரை. விலை அதிகமானால் மணிகள் பெரிதாகவிருக்கும்,

பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்த உறுதியும் [illegible]ம், சேர்த்தியுமான கம்பளிப்போர்வைகளை, சு முழம் நீளம ந முழம் அகலம் சிவப்பு முதலிய சகல நிறத்திலுந் தயாராக இருக்கின்றன. உருப்படி க-க்கு ரூபா இ-அ-0 ஷெ சிறிசு க-க்கு ச-அ-0 மேகவர்ண போர்வை க-க்கு சு-அ-0 தபால் செலவு பிரத்தியேகம்

காசி வயிரவர் கயிறு.

முதல் நெம்பர் ௱-க்கு ... ந 00
உ-வது ,, ,, ... உ அ0
ந-வது ,, ,, ... உ 00
ச-வது ,, ,, ... 0 அ0

கஸ்தூரி

சுத்தமான கஸ்தூரி! சுத்தமான கஸ்தூரி!

நம்பர் க விலை தோலா க-க்கு ரூபா ௫௰
,, உ ,, ,, ,, ,, இ0
,, ந ,, ,, ,, ,, ச0
,, ச ,, ,, ,, ,, நஇ
,, இ ,, ,, ,, ,, நஉ

குங்குமப் பூ.

குங்குமப் பூ தோலா க-க்கு ரூபா உ முதல் இ வரை.

தந்த சாமான்கள்.

தந்த பொடி டப்பி:—கோழிமுட்டை போன்றது உருப்படி க-க்கு ரூபா உ முதல இ வரை.

கெடியார சங்கிலி:—உருப்படி க-க்கு ரூபா ந முதல் அ வரை.

குறிப்பு:—மற்றும் சகல தந்த சாமான்களும் அனுப்பப்படும்.

விலாசம்:
மானேஜர்.
பட்டு பீதாம்பர கம்பெனி,
தாராநகர் தெரு காசி.

சண்முகநாதன்.

யாழ்ப்பாணம், ஆனந்த ஞூ புரட்டாதி மீ ௨௨

பெரிய யுத்தம்

(ஃ.)

ஆஸ்திரியர் முற்றும் தாக்கப்பட்டார்கள்

ஆஸ்திரியர் கலீஷிய சண்டையில் முற்றும் தோற்கடிக்கப்பட்டார்கள் அவர்கள் இரண்டுபக்கமாய்ச் சேதம் செய்யப்பட்டார்கள். முதல் லெம்பேர்க்குக் கிழக்கிலும் இரண்டாவது லப்பினுக்கு வடக்குப்பக்கத்திலுமாம். இந்த இரண்டு சண்டையிலும் 70 ஆயிரம்பேர் மறியலாக்கப்பட்டிருக்கிறார்கள். ருஷியரால் வெற்றிகொள்ளப்பட்ட ஆஸ்திரிய இடங்கள் ருஷிய பிரதான மாகாணங்களாக்கப்பட்டன. காமியொங்காவிலும் காலிட்ஸிலும் மிகப்பெலமான இடத்திலிருந்த ஆஸ்திரியர்கள் குரூர யுத்தத்தின் பின் முற்றும் தோற்கடிக்கப்பட்டார்கள். சத்துராதியின் அனிபிரிந்த குவாலாலிப்பாவின் கீழ்ப்பக்கத்தில் மாத்திரம் ௨0 ஆயிரம் பேர் கொல்லப்பட்டவர்களும் காயப்பட்டவர்களுமானார்கள்

ஆஸ்திரிய இரண்டாவது சேனை இப்பொழுது இராணுவப் பெருமையற்றதாயிருக்கின்றது லெம்பேர்கில ருஷியர்கள் யுத்தத்துக் கடுத்த அநேக சாமான்களைக் கைப்பற்றினார்கள். ஆஸ்திரியர் போதிய துணைச்சேனை தமக்குக் கிடைக்குமென நம்பியிருக்கவில்லை சேர்வியர்கள் அவர்களுடைய தென்பக்கசேனையை யழித்தார்கள் எஞ்சியவர்கள் அங்கிருந்துபோனது சேர்வியா புடாபெஸ்ட்டுக்குத் தானும் முன்னேறிப் போதற்கு வழியைத் திறந்தது இதனால் ருஷியரின் தென்னணி பேர்லினை நோக்கிச் செல்ல இடமுண்டாகின்றது

பொதுச் சண்டை

நான்திபூருவி மிக்து கிருன்ட் மோரிஞேயிட்டிற், லெமிருன்கோ வருகால்வோர்டன் வரைக்கும் விலாசமுள்ள இடத்தில் சண்டை நடைபெறுகின்றது நமது சேனை பிரித்தானியசேனையின் பெலமான தத்துவத்துடன் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் கூலோம்மியர்மியர்சுக்கும் ஷலாவேர்ட் குவார்கோ டிஸ்திரிக்கும் முன்னேறிச் சென்ற ஜர்மனிய பட்டாளத்தவரை திரும்பிப்போகும்படி செய்தது

பிரித்தானியசேதம்

பிரித்தானியரின் முழுச்சேதம் 15,141 ஆபிசர்களுள் 63பேர் கொல்லப்பட்டார்கள். 162 காயமடைந்தார்கள். 230 பேரைக்காணவில்லை, போர்வீரருள் 212 பேர் கொல்லப்பட்டார்கள். 1061 பேர் காயமடைந்தார்கள். 1433 பேர்காணுமற்போனர்கள்.

சர்மனிய சக்கிரவர்த்தியின் ஆரும்புத்திரரான சுவக்கிம் காயப்பட்டார், சகஸீனிஞ இளவரசரான எணஸ்ட் காமூரில் கொல்லப்பட்டார் சர் கிளாட்கிரஸ்பிக்கினி என்பவரின்குமாரன் கமலபயின்சண்டையில் கொல்லப்பட்டார்.

சர்மனிய சக்கிரவர்த்தியின் மூன்றாங்குமாரனும் புருசிய இளவரசருமான அடல்பேட்டும், சர்மனிய சக்கிரவர்த்தியின் சகோதரிமகனான புருசியபிரதிக் உவில்லியமும், பிரான்சை அரசாட்சிசெய்த லூயிஸ்பிலிப்பின் இரண்டாம்மகளின் பவுத்திரனுன உவிட்டம்பேர்க் கார் இளவரசரும் கொல்லப்பட்டார்.

ஐக்கியசேனைகள் பிரான்சிலிருந்து சர்மனியரை அடியோடே துரத்திவருகிறது ௧0-ம் ௧௧-ந்தேதிகளில் ௬000 சர்மனியரையும் ௧௨ பீரங்கிகளையும் ஐக்கியபடைகள் கைப்பற்றின.

பாரிசில்யுத்தம்—பாரிசில் கோட்டைப்பீரங்கிகளிலிருந்து வருங்குண்டுகள் சத்துருக்களில் தடையின்றிப் பாய்வதற்காக நகரைச்சூழ்ந்திருக்கும் வீடுகளை ஆயிரக்கணக்காக வெடிவைத்துஇடித்துத்தள்ளுகிறார்களாம்

இந்தியமகாதேசாதிபதியவர்களின்புத்திரன் லெப்டினன் சாடிஞ்சுகாயம்பட்டிருக்கிறாராம்,

சர்மனியசக்கிரவர்த்தியின் சகோதரன் மகன் சிறைபிடிக்கப்பட்டார்,

பிரமஸ்ரீ கையொப்பவரவு	ருபா	சத
அ. சந்திரசேகரக்குருக்கள்	1	00
ஸ்ரீமான் கா. வ. சுப்பிரமணியம்	2	00
,, சி. சிவசம்பு	1	00
,, க. முருகேசு	1	50
,, சி. பொன்னையா	1	50
,, க. கார்த்திகேசு வைத்திய	1	50
,, அ. சின்னையாபத்தர்	1	00
,, மு. சிவரத்தினம்பத்தர்	1	00
,, மு. அம்பலவாணர்	1	00
,, வே. கந்தையா சிங்கப்பூர்	2	50
,, வை. ஆ. மயில்வாகனம்	3	00

சமாசாரங்கள்.

பெட்டிக்களவு—மருதானை ஸ்டேஷனில் ஒரு டிறங்குப்பெட்டியைத் திருடியதாய்க் குற்றஞ்சாட்டப்பட்ட பஹார் என்னும் இலலாமானவர் ஒருவர் ஒருமாத கடூழியமறியல் விதிக்கப்பட்டான்.

தாய் பிள்ளைக்குச் சுட்டது—சண்டியைச் சேர்ந்த கட்டமலை எனனுமிடத்திலிருக்கும் பொடிநோனு வென்பவள் தனது ஐந்துவயதுப்பிள்ளைக்கு இரும்புக்கம்பியை நெருப்பில்காச்சிச் சுட்டவளென்பதாய் கண்டிப் பொலிஸ்கோட்டில் குற்றம் சாட்டப்பட்டாள். இவளுக்காய் பிறக்டர் மெஸ் இலங்கதிலக்கை தோற்றினார்.

அபாயம்—சென்ற புதன்கிழமையிரவு அவிசாவலை றெயில்வே ஸ்டேஷனில் ஒருசிங்களவன் புகையிரதத்துளகப்பட்டு நசிந்திறந்தனன்.

பைசிக்கல் திருட்டு—கொம்பனித்தெருவில் பைசிக்கிலைத்திருடிய ஜோர்ஜ் பீட்டர் என்பவன் தான்குற்றவாளியென ஒத்துக்கொண்டதால் 9 மாத கடூழிய மறியல் விதிக்கப்பட்டது.

டற்சுக் கப்பல்—டின்ட்ஜாவி என்னும் டற்சுக்கப்பல் கொழும்புக்கு வந்துசேர்ந்தது இதுவரும்பொழுது 7 இடத்தில்பரிசோதிக்கப்பட்டதாம்.

கொழும்புக்குக் காவல்பட்டாளம்—கொழும்பைப் பாதுகாத்தற்காய் ஒரு ஐரோப்பிய காவற்பட்டாளத்தைச் சேர்க்க முயற்சிநடக்கின்றது, இதுவரையில் 203 பேர் சேர்ந்திருக்கிறார்கள்.

மோட்டர் வண்டி அபாயம்—மருதானைத் தபாலாபிசுக்குச் சமீபத்தில் இரண்டுவயதுடைய பிள்ளையுடன் ஒரு சிங்கள ஆயா போகையில் மோட்டர் வண்டியால் தட்டி விழுத்தப்பட்டனர் பிள்ளைவெகு தூரத்துக்கு வீசப்பட்டது. ஆயா தலையில் கடுங்காயமடைந்தனர் பிள்ளைக்குக்காயமில்லை.

தீவிரமாய் மோட்டர்வண்டி யோட்டல்—கண்டியில் தீவிரமாய் மோட்டர்வண்டியோட்டியதற்காய் கொழும்பு வாக்கர் சன்ஸ் கொம்பனி மெஸ். ஹெறாலும் மூவாங்கந்தைத் தோட்டத்திலுள்ள மெஸ். மெல்லொக்கும் குற்றம் சாட்டப்பட்டு ஆளுக்கு 15-ருபா அபராதம் விதிக்கப்பட்டார்கள்.

நம்பிக்கைத் துரோகம்—ஈட்ஸ்டேர்ன் புறொடியூஸ் கொம்பனியில் கூலிக்காரனாயிருந்த இராமன் என்பவன் தந்திபேசுகவொடுத்த பணத்தில் ஒரு தந்தியைப் பேசாது ரூபா 41-80 ஐ அபகரித்ததின் நிமித்தம் ஒருமாத கடூழிய மறியல் விதிக்கப்பட்டான்.

திருட்டு—கொழும்பில் வார்ட்பிளேச்சிலுள்ள மெஸ். சோமசுந்தரத்தின் வீட்டில் வேலைக்காரனாயிருந்த சின்னன் என்பவன் தங்கக்காப்பைத்திருடி விற்கக்கொண்டுபோனவிடத்தில் பிடிக்கப்பட்டு பொலிஸ் கோட்டுக்குக் கொண்டுவரப்பட்டான். அவன் குற்றவாளியென ஒத்துக்கொண்டமையால் ஒருமாத கடூழியமறியல் விதிக்கப்பட்டான்.

தபால் போக்குவரத்து—ஜர்மனியுடன் தபால் போக்குவரத்து வைத்துக்கொள்ளக் கூடாதென்பதாய் அரசாங்கத்தார் கட்டளையிட்டிருக்கின்றனர்

விவாகம்—நமது உத்தமதேசாதிபதியவர்களின் புத்திரிக்கும் மாத்தளை உப ஏசண்டாயிருக்கும் மெஸ். ஸ்டிவின்சனுக்கும் சென்ற 8 ௳ செவ்வாய்க்கிழமை விவாகம் கண்டியில் நிறைவேறியது இருவரும் நுவரெலிக்குப் போனார்கள்

மென்ரோர்ப் அவர்கள் தேகவியோகமாயினர்—மேற்மாகாண ஏசண்டராயிருந்த இவர் நெருப்புக்காச்சலால் தேகவியோகமாகினர். இன்னொருவர் அவரிடத்திற்கு நியமிக்கப்படும்வரையும் அங்கு டிஸ்திரிக்கு நீதிபதியாயிருக்கும் மெஸ். கேரி அவர்கள் அக்டிங்காய் அந்த வுத்தியோகத்தைப் பார்த்துவருகின்றனர். தற்போது யாழ்ப்பாணம் டிஸ்திரிக் நீதிபதி அவர்கள் மேல்மாகாண ஏசண்டராகநியமிக்கப்பட்டு அங்குசென்றிருக்கின்றனர்.

விவாகம்—நல்லூர்வாசரும் நம்பத்திரிகாபிமானியுமாகிய ஸ்ரீ வே செல்லப்பா அவர்களின் புத்திரி சிவகாமிப்பிள்ளைக்கும் திருநெல்வேலி கிழக்கு வி. வேலுப்பிள்ளையின புத்திரன் சுல்லதம்பிக்கும் இந்த மாதம் 22௳ திங்கட்கிழமை இரவு திருமங்கிலியதாரஞ் செய்யப்பட்டது பலவிதவாணவேடிக்கைகளுடன் மன்றல்மனை சென்றனர். இப்புதிய குடும்பம் பல்லாண்டு வாழச் சண்முகநாதன் திருவருள் புரிவாராக.

இன்னுமோர் விவாகம்—சங்குவேலிவாசரும் பிரபலகுத்தகைகாரனும் நம்பத்திரிகாபிமானியுமாகிய ஸ்ரீ கா. வயித்திலிங்கம் அவர்களின் புத்திரி பொன்னம்பாவுக்கும் வண்ணார்பண்ணை ஸ்ரீ சி. கணபதிப்பிள்ளையின புத்திரன் சின்னத்துரைக்கும்சென்ற மாதம் 22௳ திங்கட்கிழமை இரவு விவாகோற்சவம் சகல ஆடம்பரத்துடன் நடைபெற்றது இப்புதியகுடும்பம் பல்லாண்டு வாழச் சண்முகநாதன் திருவருள்புரிவாராக

பின்னுமோர்விவாகம்—நம்கையொப்பகாரனான கோப்பாய் மெஸ் பொன்னையாயோசேப் அவர்களின்புத்திரன் மெஸ். கிறன்சிஸ் புண்ணியசிங்கத்திற்கும் மிஸ் மேகிறேனா திரவியம் கைற் என்பவுக்கும் சென்ற கஎ௳ தொடுவாய்ப்பகுதியில் விவாகோற்சவம நடைபெற்றது, மணமகன் மணமகள் பல்லாண்டுவாழப் பெருமான்கிருபைசெய்வாராக

இன்னுமோர் விவாகம்—நாவடிவாசரும் யாழ்ப்பாணம் இந்துக்காலேஜில் தமிழ்த்தலைமைப் பண்டிதராயிருந்தவரும் யாழ்ப்பாணம் பிசுக்கால்கந்தோரில் தலைமை லிகிதராயிருந்த இராசநாயக ஆறுமுகமுதலியார்புத்திரருமாகிய ஸ்ரீமத் சோமாஸ்கந்தபிள்ளை யவர்களுக்கும் கொக்குவில் ஸ்ரீமத் சரவணமுத்து அவர்கள் புத்திரி சௌபாக்கியவதி அமுதவல்லியம்மாளுக்கும் சென்ற மாதம் ௧0௳ புதன்கிழமையிரவு விவாகம்நடைபெற்றது மணமகன்கச்சேரிச்சிறப்பாயிருந்த உடுப்பிட்டிச் சேனாதிராயமுதலியாரின் வழித்தோன்றல் மணமகள் யாழ்ப்பாணம் மணியகாரனாயிருந்த வண்ணார்பண்ணை சுப்பிரமணியம் சின்னையா அவர்கள்மாதுலர் புத்திரிஇப்புதியகுடும்பம் நீடூழி வாழ்கச்சண்முகநாதன் கிருபைபாலிப்பாராக

தொற்றுநோய் பரப்பல்—கொழும்புச்செட்டிகளிருவர் பிளேக்குநோயாளரை வேறிடத்துக்குமாற்றியதினல் ஆயிரம் ரூபாதெண்டம் விதிக்கப்பெற்றனர்

கொப்பறா—விலையேறிக் கொண்டுவந்தகொப்பறா பின்னும் விலைகுறைந்துகொண்டது. யுத்தம்முடியும்வரை இலங்கைவியாபாரங்கள் மிகத்தாழ்ந்தனவாயிருக்குமென்பது வியாபாரிகளின அபிப்பிராயம்

கஞ்சா—கொழும்பிலேயுள்ள பெனலிஸ்பொராவென்பவர் கஞ்சாவைத்திருந்ததாய்க் குற்றம்சாட்டப்பட அவர்குற்றவாளியென வொத்துக்கொண்டமையால் ௨௫0 ரூபா அபராதம அல்லது ஆறுகிழமை மறியல் விதிக்கப்பட்டது.

பெல்ஜியகஷ்ட சகாயநிதி—பெல்ஜியத்திலுள்ள கைம்பெண்களுக்கும் காயமடைந்த போர்வீரர்களுக்குமாய் இரண்டாயிரம் பவுண் சகாயநிதி சேர்த்து பெல்ஜியத்திலுள்ளவர்களுக் கனுப்ப இலங்கையிலுள்ள சிங்களசாகிய துரைச்சாணிமார் ஆயத்தப்படுத்துகிறார்கள், இந்தநிதி லேடிசார்மேர்ஸ் மூலமாய் யனுப்பப் படும். இவ்விதம் இந்த மாதர்கள் செய்வது இலங்கையின் பருப்பத்தில் அரைப்பங்குக்குச் சற்றதிகமாயுள்ள பருப்பத்தையும் இலங்கையிலுள்ள குடிசனங்களில அரைப்பங்குக்குச்சற்றதிகமாயுள்ள குடிசனங்களையுமுடைய தேசத்தில் வசிப்பவர்களின் விரத்தன்மைக்காகவாம். இந்தநிதிக்கணக்கு வரும் ஒக்டோபர் மாதம் 20ந் ௳யில்முடிக்கப்படும். நமது உத்தமதேசாதிபதியவர்கள் இந்தப்பணத்தைத் தபாலாபிசு மார்க்கமாய்ச் செலவின்றியனுப்ப வாக்களித்திருக்கிறார்கள். இந்தப்பணச்சேகரத்தில் இலங்கையிலுள்ள ஒவ்வொரு பட்டணமும் சேரும். இதன்நிருவாகசபையில் எச். எல். மெல் அம்மாளும், ஜே. ஏ. பொரா அம்மாளும், எவ். ஆர். சேனநாயக்க அம்மாளும், ஈ. ஜி. ஜயவர்த்தன அம்மாளும் சேர்ந்திருக்கிறார்கள்.

புத்தகவரவு—குருவணக்கமணிமாலை என்னும் புத்தகமொன்று வரப்பெற்றோம் இதனை நமக்கனுப்பியவர் அதன் பிரசாரகராகும் ஸ்ரீமான் க. சபாரத்தினம் வைத்தியர்அவர்களே இதனுக்கியோன் ஸ்ரீமத் சங்கரசுப்பிரமணிய சச்சிதானந்தராஜயோகிஅவர்கள் இதில் சொற்சுவை பொருட்சுவை பொதிந்துள்ளது பிரசாரகர்க்கமக்கோர் பிரதியனுப்பியதற்காக நன்றியறிதல் கூறுகின்றோம்.

டிக்கற்றின்றிப்பிரயாணஞ்செய்தல—யாழ்ப்பாணத்திலிருந்து கொக்குவிலுக்கு டிக்கற்றின்றிப் பிரயாணஞ்செய்த ஓர்பிராமணரும் சுதுமலையிலுள்ள சேர்வையர் ஒருவரும் ஆளுக்கு ஐவைந்துரூபா தெண்டமும் டிக்கற் பணம் அறுறுசதமும் இறுகத்தீர்ப்புப் பெற்றார்கள்.

கரையூரில் சிலவகை—ஓர் கரையான் ஓர் ஆமையைத் தெருவழியே இழுத்ததற்காக 2 ரூபா 50 சதம் அபராதம்பெற்றான், வேறொருமனுஷி ஓராமையின் தலையைக் கோடரியால் துண்டித்ததினல் எச்சரிக்கப்பெற்றாள். கடற்கரையில் ஆமைகளை மலலாத்திலிடும் பரிதாபத்தைக் காண்பாரில்லையா

......

திருட்டு—நல்லூர்க் கந்தசுவாமி கோயிற் திருவிழாவில், ஓர் வண்ணார்பண்ணை வாலிபன் ஓர் பெண்பிள்ளையின சாட்டை அறுத்துக்கொண்டு ஓடினதற்காக ஆறுமாச மறியலூழியத் தீர்ப்புப்பெற்றான். சின்னக்கடைவாசியான வேறொருவாலிபன் அடைக்கலமாதாவின் கோயிற் றெருவில இவ்விதத்திருட்டு திருடினதற்காக 3-மாசக் கடூழிய சிறைத் தீர்ப் படைந்தான்

......

கள்ளமாய்ச் சாராயம்விற்றல்—புத்துராவொருவன் கள்ளச்சாராயம் விற்றதினல ௧௫0 ரூபா தெண்டமிடப்பட்டான

சென்றவாரத்து யுத்ததினசரி

நான்சியில்நடந்த யுத்தத்தில் ஜர்மனியர் பின்வாங்குமாறநேரிட்டது

பிரஞ்சுப்படை வாஸ் ஜெஸ்மலைப்பாரிசத்தில் நடக்கும்யுத்தத்தில வெற்றிபெற்றது.

பாரிசுக்கு ௨௫ மைலதூரத்தில் நடந்தயுத்தத்தில செர்மனியப்படைமிகுதியும் தோலவியடைந்து பின்னேக்கிச்செல்லுகின்றது.

மாண்டிநிகிரோக்கள் ஆஸ்டிரியப் பட்டணங்களாகிய வியானிட்சாவையும்,போசானிட்சாவையும் பிடித்துக்கொண்டனர்

ஜர்மானியப்படை டினண்டைத்தாக்கி அழித்துவிட்டு ஜெண்டைநோக்கிச் செல்கின்றது. லீலியைப்பிடித்துக்கொண்டது. வென்சயிருநியால்முன்னேக்கிச்செலவது கூடாமையாயிருக்கின்றது.

ருஷியப்படை மிக்கோலஜூப்கோட்டையைப் பிடித்துக்கொண்டது. காலிஷியா ருஷியமாகாணமாய்விட்டது, ருஸ்யர் லிப்பலின் ஆகாயவிமானத்தைப் போலண்டில் பிடித்துக்கொண்டனர்.

ஆஸ்டிரியப்படை லப்னினில புறமுதுகிட்டுப் போகின்றது. ஓர ஆஸ்டிரியப்பட்டாளம ருஷியரிடத்து சரணமடைந்துவிட்டது

வடகடலில்செர்மன கப்பலகளிலலெ நிபாசாவாண்டில பிரிட்டிஷ்படை செர்மனியரைத் தோற்கடித்தது

ஆண்ட்வெர்ப்பிலிருந்து பெலஜியப்படைசெர்மானியப்படையை யெதிர்த்து நிற்கின்றது ௬00 ஜெர்மானியர் கைதுசெய்யப்பட்டனர்

ஆஸ்டிரியப்படை கிராக்கோவைவிட்டுப் போகின்றது

செர்வியர் செம்லினைப் பிடித்துக்கொண்டனர்

ஒருபிரிட்டிஷ் போர்க்கப்பல ஹாம்பர்க் அமெரிக்கன் கப்பலைப் பிடித்துக்கொண்டது, அதிலிருந்த ௬00 பேரைக் கைதுசெய்தது

பிரிட்டிஷ், பிரன்சுப்படை, சொய்சான்ஸையும் கோப்பெய்னையும் நோக்கியோடும் ஜெர்மன்படையைத் துரத்திச் செல்லுகின்றது அநேக ஜெர்மானியர் கைதுசெய்யப்பட்டனர், அநேக யுத்தசாமான்கள் பிடிபட்டன ஜெர்மன்படையின் ௩ஆ ப்பாகம் சோர்வடைந்து வருகின்றது-

ஜெர்மன்போர்க்கப்பல்கள் பால்டிக்கடலில்ஆரவாரஞ்செய்து வருகின்றன அவை ஒருபிரிட்டிஷ் கப்பலைப்பிடித்து அதிலிருந்த பிரிட்டிஷ் பிரயாணிகளைக் கைதுசெய்துவிட்டன

ஜெர்மன்படை கிழக்குப்பிரஷியாவிலசேர்ந்து வருகின்றது

ஆஸ்டிரியர் செம்நதியில் மிகுதியும் தோலவியடைந்தனர் ஜெர்மானியப்படை லிம்பர்க்கையும் ஆண்டுவேர்ப்பையும் விட்டுப்போகின்றது. பெலஜியர் இழந்துபோன டெர்மாண்டியைப் பிடித்துக்கொண்டனர், இதில ஜெர்மானியர் மிகுதியும் சேதமடைந்தனர்

கிரோடெக்கில நடந்தசண்டையில ருஷியருக்கு ஏற்பட்ட பெரியவெற்றியின் விவரங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன ருஷியர்கள் ௬0000 ஆஸ்ட்ரியர்களையும் ஆயிரக்கணக்கான பீரங்கிகளையும் பிடித்திருக்கின்றனர்

ஜெர்மன்சேனை இரண்டுபிரிவாக்கப்பட்டது—வெயினுக்கும ப்ரசல்சுக்கு மிடையிலுள்ள கார்ட்டென்பார்க்கைப் பிடித்திருந்தசெர்மனசேனையை ஒருபெல்ஜியன்சேனை இரண்டுபிரிவாகச் செய்துவிட்டதென்று சொல்லப்படுகிறது.

ஆண்ட்வெற்பிற்கருகேசண்டை—ஆண்ட்வெற்பிற்குத்தென்கிழக்கில் பெல்ஜியருக்குஞ் செர்மனியருக்கு மொருசண்டைநடக்கிறது.

ஆகாகான் சிப்பாயாகவேலைசெய்யச் சித்தமாயிருக்கிறார்—ஆகாகான் தென்னாபிரிக்காவிலிருந்து லண்டனுக்கு வந்துவிட்டனர். எமதுவருவாயனைத்தையும் கவர்மெண்டாரிடம் ஒப்புவிக்கச்சித்தமாயிருக்கிறேமென்று தெரிவித்திருக்கிறார். நானும் யுத்தத்திற்குச் செல்கிறேமென்று அவர்தெரிவித்திருக்கிறார். எனக்குராணுவப்பயிற்சியில்லாமையால் காலாட்படை ஒன்றிலசேர்ந்து சாதாரணசிப்பாயாக வேலைசெய்யத் தயாராயிருக்கிறேனென்று தெரிவித்திருக்கிறார்.

ப்ரொபஸர் ராமமூர்த்தி—கலியுகவீமனென்று கூறப்படும் ப்ரொபஸர் ராமமூர்த்தி இங்கிலாந்திற்கு உதவியாக யுத்தஞ் செய்கிறேனென்றும் இந்தியவலண்டியர்களைச் சேர்க்கிறேனென்றும் தெரிவித்திருந்தார்; சமயம் சேர்ந்தபொழுது உமது உதவியை மறந்துவிடமாட்டோமென்று ராஜப்பிரதிநிதி அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்.

குடியேற்றநாடுகளின் உதவி.

௫ லக்ஷபவுண் கோதுமைமா—மானிடோவா இங்கிலாந்திற்கு ௫ லக்ஷபவுண் விலையுள்ள கோதுமைமா அனுப்பியிருக்கின்றது.

பிரிட்டிஷ் கொலம்பியா ௨0000 ஸாலமன் மச்சம் அனுப்பியிருக்கிறது.

ஒருபிரிட்டிஷ் வியாபாரக்கப்பல் மூழ்கிவிட்டது—லிவர்பூலைச் சேர்ந்த 'ருனோ' என்னும் ஒருவியாபாரக்கப்பல் வடகடலில் செர்மனியர் வைத்திருந்த சுரங்கத்தில் மோதி மூழ்கிவிட்டது. அதிலிருந்த 20 ருஷியர்கள்மட்டும் கடலுக்கிரையாயினர்கள்.

ஜப்பானின் முயற்சிகள்—ஜப்பானிய ஆகாயவிமானங்களிரண்டு சீனாவிற் செர்மனியருக்கு சொந்தமான ட்ஸிங்டோ விலுள்ள கம்பியில்லாதந்தி ஸ்டேஷனில் வெடிகுண்டுகளை யெறிந்தன. அங்குள்ள செர்மானியர் ஒராகாயவிமானத்தின்மீது சில முறை சுட்டனர். அதனால் சேதமடையாது போய்விட்டன.

6_000 செர்மனியர் இறந்தனர்—ப்ரானில் நடந்தசண்டையில் இறந்துபோன செர்மானியர்களுடைய அறுபத்தாராயிரம் டிக்கட்டுகள் பிரான்சிலிருந்து பிரஸல்சுக்குவந்திருக்கின்றன. (இதனாலங்கு அறுபத்தாயிரம செர்மனியர் இறந்துபோனார்களென்று தெரிகின்றது)

ஒருபிருட்டிஷ்கப்பல் மூழ்கிவிட்டது மிகுந்த உயிர்ச்சேதம்—பாத்பைண்டர் என்னும் ஸ்டீமர் வடகடலில செர்மானியர் வைத்திருந்த சுரங்கத்திமேமோதிக் கடலில மூழ்கிவிட்டது. அது திடீரென்று விரைவில மூழ்கிவிட்டது அதனால நால்வர் இறந்தனர்கள், ௪ பேர் காயமடைந்தனர், உசுபேர் தப்பிப்போயினர்.

ஒருசெர்மனசேனாபதி கொல்லப்பட்டார்—லைசுக்குத்தெற்கே பிரஞ்சுசேனையுடன் செய்தசண்டையில் பத்தாவது செர்மன் பட்டாளத்தின் தலைவர் இறந்தாரென்று தெரிகின்றது.

ஆஸ்டிரியர்களின் அபஜயம் இரண்டுபட்டணங்கள்பிடிபட்டன—மாண்டிநீக்ரோசேனைகள் ஹெர்ஸகோவினாவிலுள்ள பொல்ஜாண்டிகாவில் ஆஸ்டிரியர்களைத் தோற்கடித்தனர். அங்கேயுள்ள பண்டசாலையிலுள்ள பொருள்களனைத்தையும் அவர்கள் கைப்பற்றிக்கொண்டனர். வீயாவிட்ஸா ராஜனிக் என்னும்பட்டணங்களையும் அவர்கள் பிடித்துக்கொண்டனர்.

ஜெர்மனிக்கு மிகுந்தசேதங்கள்—பெல்ஜியத்திலுள்ள மலைன்ஸ் பட்டணத்திற்குமேற்கே நடந்த பயங்கரமானசண்டையில் ஜெர்மன்சேனை மூவாயிரம்பேரையிழந்தது.

௯௦ சக. பேர் பிரிடிஷ் சேனையிற் சேதம்—இதுவரை பிரிடிஷ்சேனையிற் சேதமானவர்களின் தொகை ௯௦சக. செர்மனிக்கு இதனைவிட மூன்றுபங்குஅதிகசேதமாம்.

செர்மானியர் ஜப்பானியக்கப்பல்களைக் கடலில் முழுகச்செய்யும் முயற்சிகள்—சீனாவில் செர்மனிக்குச்சொந்தமான கியாச்சோவைச் சேர்ந்த ட்ஸிங்டோவிலுள்ள கோட்டைகளிலுள்ள சேனைகளுக்கும் நகருக்கும் அருகிலுள்ள கடலில் செர்மானியர் வைத்திருக்கும் சுரங்கங்களை யெடுக்கமுயலுகின்ற கப்பல்களைக் கடலில்முழுகுமாறு செய்ய முயலுகின்றன. ஆனால் ஜப்பானியக்கப்பல்கள் தந்திரமாய்வேலைசெய்கின்றது

௩,000 செர்மனியர் இறந்தனர்—மாலேனவில் நடந்தசண்டையில் செர்மனியர் இறந்துபோன மூவாயிரம் சோல்ஜர்களை விட்டு பரல்சுக்கு ஓடிவிட்டனர்.

பாரிஸின் நிலைமை—பிரஞ்சு ஆகாயவிமானிகள் சிறிய இரும்பம்புகளை பகைவர்மீது எறிந்துவருகின்றனர். பாரிசிலுள்ள சனங்களெல்லாம் வெளியேபோய்க்கொண்டிருக்கின்றனர். அங்கு இருபது லட்சம் சனங்களுக்குமேல் இல்லையாம்.

இரண்டுபட்டணமும் நாற்பது பீரங்கிகளுமகப்பட்டன—லெம்பர்க்குக்குத்தெற்கே இருபதுமைல் தூரத்திலுள்ள மிக்கொல சாப் என்னுங்கோட்டையை ருஷியர் பிடித்துக்கொண்டனர். அவர்கள் நாற்பது பீரங்கிகளையும் ஒருவருஷத்திற்குப் போதுமான தீன்பண்டங்களையும் பிடித்தனர்,

ஆஸ்ட்ரியாவில் ருஷியரின் ஆட்சி—ருஷியர்கள் ஆஸ்ட்ரியாவில் ஆக்ரமித்துப்பிடித்துள்ள கலிஷியா மாகாணத்திற்கு கவுண்ட் பொப்ரின்ஸ்கி என்பவர் கவர்னர்ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

செர்மன்பட்டாளங்கள் அழிக்கப்பட்டது—சென்ற வியாழக்கிழமை பிரஞ்சுசேனைகள் இரண்டு செர்மன் பட்டாளங்களை கசு மைல்தூரம் துரத்திச்சென்று அவற்றைப் பீரங்கியாற் சுட்டுநாசப்படுத்திவிட்டன. செர்மானியரிடம் வெடிமருந்துகளில்லாமையால் அவர்கள் சும்மாவிருந்தனர். பிரஞ்சுக்காரர் அநேக கைதிகளையும் பீரங்கிகளையும் பிடித்துக்கொண்டனர்.

பாரிஸில்செர்மன் கைதிகள்—குர்ஸ் நதிக்கருகே நடந்தசண்டையில் கைதிசெய்யப்பட்ட 360 செர்மானியர் பாரிசில் வைக்கப்பட்டிருக்கின்றனர்

செர்மானியர் வெள்ளத்தி லழிந்தனர்—செர்மானியர் ஆண்ட்வெர்ப்பில் பிரவேசித்தபொழுது பெல்ஜியர்கள் ஆண்ட்வெர்ப்பிற்குத் தென்கிழக்கேயுள்ள கடல்மடைகளைத்திறந்துவிட்டனர்; அதனால் பெருவெள்ள முண்டாய்விட்டது. செர்மானியர்களுள் அநேகர் பிரவாகத்தி லகப்பட்டிறந்தனர். அநேகர் மரங்களிலும் வீட்டுமுகடுகளிலும் அகப்பட்டுக்கிடந்தனர் செர்மனியர் அநேகபீரங்கிகளையும் இழந்தனர். வெள்ளி சனிக்கிழமைகளில் நடந்தசண்டையில் அவர்களுள் ௫000 பேர்பெல்ஜியர்களால் இறந்தனர்.

கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்கட்குப் பத்திராதிபர் உத்தரவாதி யல்லர்]

விபூதி.

(0)

விபூதியாவது பசுவின்சாணத்தை அக்கினியிலே தகித்தலா லுண்டாவதே யாம். அதன் பேதம் உற்பத்தியினால் கற்பம் அநுகற்பம் உபகற்பம் என மூன்றுவகைப்படும். சாணத்தைப் பூமியிலே விழுமுன் சத்தியோசாத மந்திரோச்சாரணத்துடன் தாமரையிலையிலே ஏற்று மேலுள்ள அசுத்தங்களை நீக்கி அதன்பின் பஞ்சகவ்வியத்தை வாமமந்திரோச்சாரணத்துடன் வார்த்துப் பிசைந்து அதன்பின்பு ஒரிடத்திலே பதரிட்டு அதன்மீது தற்புருட மந்திரோச்சாரணத்துடன் வைத்து சிவாக்கினியினாலே அதை நீறாக்கி ஈசான மந்திரோச் சாரணத்துடன எடுத்து புதிய வஸ்திரத்தினாலே வடித்துப் புதுப்பாண்டத்தி லிலிட்டு அதற்குள் மல்லிகை முல்லை முதலிய சுகந்தாதிகளிட்டு விபூதி காயத்திரி மந்திரோச்சாரணத்துடன் ஒரு சுத்தமான இடத்திலே வைத்துக்கொள்ள வேண்டியது. இவ்விதமாக வைத்துத் தரிக்கும் விபூதியே கற்பம் என்று சொல்லப்படும். சித்திரைமாதத்திலே காட்டிற்போய்உலாந்துகிடந்த கோமயத்தை எடுத்து ஒரிடத்திலே குவியல்செய்து அதைக்கொண்டுவந்து உரலிலே இட்டு இடித்துத் தூளாக்கிக் கோசலத்தை வார்த்துப் பிசைந்து உண்டையாக்கிப் பதரிட்டு அதிலேவைத்துத் தகித்து முன்சொன்ன முறைப்படியே எடுத்து வைத்துக்கொள்ள வேண்டியது. இவ்விதமாக எடுத்து வைத்துத் தரிக்கும் விபூதியே அநுகற்பம் என்று சொல்லப்படும். காட்டிற்சென்று மரங்கள் ஒன்றோடொன்று உரோஞ்சுதலி னெரிந்தசாம்பரை எடுத்துவந்து உண்டைபண்ணிப் பஞ்சகவ்வியத்தை வார்த்துப் பிசைந்து பதரிட்டு அதிலே [illegible]வைத்து முன்சொன்னமுறைப்படி எடுத்து வைத்துக்கொள்ள வேண்டியது. இது உபகற்பம் என்று சொல்லப்படும்.

இவை யன்றி இடிவேறுண்ட விடத்திலுள்ள விபூதியும் மலை முதலிய விடங்களிலே தானாகவுண்டாகிய விபூதியும் அகற்பம் என்று சொல்லப்படும். விபூதி சிவலிங்கங்களுள் ஒன்று. விபூதி பசுமம், க்ஷாரம், ரக்ஷை என்பன ஒருபொருட்கிளவிகள். சாணத்தை ஏற்குமுறை சாந்திகம், பௌட்டிகம், காமதம் என மூன்றுவகைபாகக் கூறுகின்றனர். சாணமிடும்போது பசுவினுடைய பிட்டத்திலே கைவைத்து ஏற்பது சாந்திகமாகும் பூமியிலே விழுதற்குமுன் தாமரையிலையிலே ஏற்றுக்கொள்ளுவது காமதமாகும். சாணம் கன்றீன்று சூதகமுடைய பசு, கன்றீனுதபசு, கன்று இறந்தபசு, கிழப்பசு, மலமுண்ணும்பசு ஆகிய இவைகளி லிருந்து எடுக்கக்கூடாது. சாணம் எடுக்கும்போது பசுக்களை அடைந்து கோசாவித்திரி முதலிய மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு எடுக்க வேண்டும். சாணத்தை அட்டமி பௌர்ணிமை அமாவசை சதுர்த்தசி திதிகளிலேயே எடுத்தல் வேண்டும். கருநிற விபூதி, செந்நிறவிபூதி, பொன்னிறவிபூதி, புகைநிறவிபூதி தரிக்கலாகா? வெண்ணிற விபூதியே தரிக்கத்தக்கது. கருநிற விபூதி தரித்தால் வியாதியையும் செந்நிற விபூதி தரித்தால் அபகீர்த்தியையும் பொன்னிற விபூதி தரித்தால் தரித்திரத்தையும் புகைநிறவிபூதி தரித்தால் அற்பாயுளையுங் கொடுக்கும். வெண்ணிறவிபூதி தரித்தலே மேலாகிய மோக்ஷத்தைக் கொடுக்கும்.

இனி விபூதியை இவ்விதகுற்றங்க ளின்றி எடுத்து வைத்துக் கொள்ளுமிடத்து வில்வக்குடுக்கை, சுரைக்குடுக்கை, சம்புடம் அல்லது விபூதிப்பை இவைகளிலே எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். அவ்விதம் எடுத்துவைத்த விபூதியைத் தரிக்குமிடத்து திரிபுண்டரம் உத்தூளனம் என இரண்டுவகைப்படும். உத்தூளனமாகத் தரிக்குமிடத்து விபூதியை எடுத்து அண்ணாந்து "சிவ சிவ" என்று சொல்லி நிலத்திலே சிந்தாதபடி தரிக்கவேண்டும். திரிபுண்டரம் தீக்ஷை கேட்டவர்களே செய்யவேண்டியது. திரிபுண்டரமாகத்தரிக்குமிடத்து விபூதியை எடுத்துச் சலந்தெளித்து நன்றாகக்குழைத்து சிரம், நெற்றி, காதுகளிரண்டு, கழுத்து, மார்பு, புயமிரண்டு, உந்தி, முழங்கையிரண்டு, மணிக்கட்டுகளிரண்டு, முழந்தாளிரண்டு, முதுகு, விலாப்புறம் என்னு மிடங்களிலே தரித்தல்வேண்டும். நெற்றியிலும் மார்பிலும் தோள்களிலும் ஆறங்குல அளவிற்கும் மற்றைய தானங்களிலே ஒவ்வோரங்குல அளவிற்குந் தரித்தல்வேண்டும். (திரிபுண்டரம்—மூ (குறி)) திரிபுண்டரம் தரிக்குமிடத்து அலைந்திளிடை வெளி ஒவ்வொன்று பொருந்தி நின்றலாகாது அன்றியும் இடைவெளி ஒவ்வோரங்குல வளவினதாய் மிருத்தல்வேண்டும். அவ்விதமின்றி அகலினும், இடை யுறினும் முற்கூறிய அளவிற் குறைகினுங் குற்றமாமெனக் [illegible] விபூதிநிலத்திலே சிந்தினால் அதனை எடுத்துவிட்டு அந்த இடத்தைச் சாணந்தோய்ந்த சலந்தெளித்து மெழுகல்வேண்டும். விபூதி தரியாதவருடைய முகம் செந்தளிப்புடையதாகாது. சண்டாளர்முன்னும் பாவிகள்முன்னும் அசுத்த நிலத்தும் வழிநடக்கும்போதும விபூதிதரிக்கலாகாது. ஒருகையால்வாங்கிய விபூதியும் விலைக்குக்கொண்ட விபூதியும் சிவதீக்ஷையில்லாதார் தந்த விபூதியும் தரிக்கலாகாது. விபூதிதரிக்கும்போது வடக்குமுகமாகவேனும் கிழக்குமுகமாகவேனும் இருந்துகொண்டு தரித்தல்வேண்டும். மலசலமோசனஞ்செய்து ஆசமித்தபின்னும் பானஞ்செய்து ஆசமித்தபின்னும் போசனஞ்செய்யமுன்னும் பின்னும் நித்திரைசெய்யும்போதும் நித்திரைவிட்டு எழுந்தவுடனும் சந்தியாகாலங்களிலும் விபூதி ஆவசியகமாகத் தரித்துக்கொள்ள வேண்டியது.

ஆகையினால் விபூதி தரித்தலினால் ஒருவற்குப் பசுத்துவத்தைக் கெடுத்துச் சிவத்துவத்தை விளைவிக்குமென்பது துணிபு. இவ்வியற்கையுடைய விபூதியைச் சொன்ன கிரமப்படி எடுத்துவைத்து அணிவோர் சிவனடியாராக விளங்கி இம்மையிலே புகழையும் மறுமையிலே நற்கதியையு மடைவர் என்பது திண்ணம்.

இங்ஙனம்
ச. ஜகநாதஐயர்.

வண்ணைவைத்தீசர் ஒருதுறைக் கோவை உரை.

மன்னும் பதியுறை வண்ணையன் னீர்மத வேள்பகழி
தின்னுங் கொடியவெய் தாபத்தைத் தீரென்று-செல்லிளநீர்
இன்னும் மனம்பொருந் தாமற்கண் மூடிநின் றேயளித்தீர்
முன்னுமெப் போது கொடுத்தறி யீர்கொன் முறையல்லவே.

இ—ள். மன்னும் பதி உறை வண்ணை அன்னீர்-நிலைபெற்ற பதியாகிய வைத்தியநாதப் பெருமானார் வீற்றிருக்கப்பெறும் வண்ணைமாநகரத்தை யொப்பான பெண்ணே; மதவேள் பகழி-மன்மதனது பூம்பாணங்கள்; தின்னும் கொடிய வெய் தாபத்தை தீர் என்று-கடிந்து வருத்துங் கொடுமையுடைய வெவ்விய காமவிடாயை நீக்கிக்கொள்ளுகவென்று; செல் இளநீர் இன்னும் மனம் பொருந்தாமல் கண்மூடி நின்றே அளித்தீர்-செவ்விளநீர்போலுந் தனங்களை இதுவரையும் மனம் ஒருப்படாமற் கண்களை மறைத்து நின்றே புலப்படத் தந்தீர்; முன்னும் எப்போதும் கொடுத்து அறியீர்-இதற்குமுன் எக்காலத்தும் கொடைத்தொழிலைச் செய்து அறியீர்; முறை அல்ல-இவ்வாறு கண்மூடியளித்து கொடுத்தது நூற்குமுறைமையுடையதல்ல. எ—று.

கொல் ஏ அசைநிலை. மதவேள் இருபெயரொட்டு. இன்னும் மருட். [illegible] முறைமெயன மைவிகுதிகெட்டு நின்றது. நின்று அளித்தீரென இயையும். விகாரமற்ற இறைவனை வீற்றிருக்கப்பெறுதலால் வண்ணைமாநகரம் மேம்பாடடையுமாறுபோலத் தலைவியும் மேம்பாடுடையளெனத் தலைவன் கூறினான் என்பார் மன்னும் பதியுறை வண்ணையன்னீர் என்றும், நீர் வேட்கையான் வருந்தாகத்தினும் மன்மத பாணங்களால் வருந்தாகம வருத்தத்தின் மிகவுங் கொடுமையுடைய தென்பார், மதவேள் பகழி தின்னுங் கொடிய வெந்தாகம என்றும், வண்ணமும் வடிவும் ஒப்பாவதனாற் குணமும் ஒப்பாக இயைத்தனை என்பார் தனங்களைச் செவ்விளநீர் எனவுங் கூறினர். பதி இறைவன். (கஎ)

சிலையின்றி நின்றவ னோடுமற் போரினைச் செய்தவன்சேர்
கலையொன்றி னோர்புகழ் வண்ணையன் னீர்கரிக் கன்றொடுவாள்
மலையொன்று சீயக் குருளையிட் டேகுற மாதெனுநீர்
வலையின்றி மீன்படுத் தீருமைப் போலெவர் வல்லவரே.

இ—ள். சிலை இன்றி நின்றவனோடு மற்போரினைச் செய்தவன் சேர்-வில்லில்லாது நின்ற அருச்சுனனோடு மற்போரைப்புரிந்த வைத்தியநாதப் பெருமான் வீற்றிருக்கப்பெறுதலாலே; கலை ஒன்றினோர் புகழ் வண்ணை அன்னீர்-நூல்களிற் றலைசிறந்த அறிஞர்கள் புகழ்கின்ற வண்ணைமாநகரத்தைநிகர்த்த பெண்ணே; வாள் மலை ஒன்று குறமாது என்னும் நீர்-வாளமலையில் வாழுங் குறமாதென்று சொல்லத்தக்கீர்; கரிக் கன்றொடு சீயக்குருளையிட்டே—தனங்களாகிய யானைக்கன்றொடு இடையாகிய சிங்கக்குருளையையும் புகையிட்டீர்; வலையின்றி மீன்படுத்தி யாவரும் அகப்படுத்தினீர்; உமைப்போல வல்லவர் எவர்—உம்மைப்போல வல்லமையுடையார் ஒருவருமிலர். எ—று.

ஏகாரங்களிரண்டும், முன்னையது தேற்றம், பின்னையது இசை நின்றவன் செய்தவன் என்பன வினையாலணையும் பெயர்கள். புகழ்மன்னிய வண்ணைத்தொகை. உம்மை உயர்வு சிறப்பு. இடைக்குறைந்து நின்றது. இன்னீர் நீர் என இயையும். உத்தம சாதிப்பெண்களது கண்களுக்குக் கயல் மீனுவமை புணர்த்துக்கூறுதல் ஆன்றோர் வழக்காதலின், உவமைக்கும் உருவகத்திற்கும் உரிய ஒப்புமைகருதித் தலைவியின் கண்களை மீனெனவும் தனங்களை யானைக்கன்றெனவும் இடையைச் சிங்கக் குருளை யெனவுங் கூறினர். இது [illegible].

(வரும்) (கஅ)

தி- கிருஷ்ணபிள்ளை, உபாத்தியாயர்

விஞ்ஞாபனம்.

(:o:)

நமது பத்திரிகாபிமானிகளே!

ஸ்ரீ சரவணப்பெருமான் திருவருளால் எங்கள் சண்முகநாதன் தொடங்கி வருடம் மூன்று பூர்த்தியாகி நாலாவது வருடம் தொடங்கி இலக்கம ஏழாயும் விட்டது. இன்னும் நமது கையொப்பாபிமானிகளிற் சிலர் சென்ற வருடங்களின சந்தாத் தொகைகளைச் செலுத்த மறந்துவிட்டனர்போலும்! இனியாவது, நமது நேயர்கள் சென்ற வருடங்களின் சந்தாத் தொகைகளைச் செலுத்தாதவர்கள் தங்கள் தங்களுடைய பாக்கியைச் செலுத்தியும் ஏனையோரும் இவ்வருடச் சந்தாத்தொகையைச் செலுத்துவதோடு சந்தாதாரர்களைச் சேர்த்தும் [illegible] 'சண்முகநாதன்' [illegible] வண்ணம் ஊக்கத்துடன் ஆக்கப்படுத்துமாறு வேண்டுகின்றேம்.

மானேசர்
"சண்முகநாதன்"
நல்லூர்
யாழ்ப்பாணம்.

நிருபவிதாநங்கள்

(0)

நிருபமெழுதுவோர் நல்ல காகிதத்தில் ஒருபக்கத்திலே நல்ல மையினால் எழுதியனுப்புதல் வேண்டும்.

தொடர்பெழுத்துக்களை யெழுதலாகாது. [illegible] நெருங்காது தனிநில விளங்குமபடியாக எழுதுதல்வேண்டும்.

எவரொருவரையாவது அநாவசியகமாய்ப் புகழ்ந்தாவது, இகழ்ந்தாவது வரையுங் கடிதங்கள் இடம்பெறமாட்டா.

பிறேரைகளுடன் ஒருவரைத்தாக்கியாவது, தூஷித்தாவது எழுதாது அறிவுவிருத்திக்குரிய நல்விஷயங்களை சுருக்கமா யெழுதியனுப்புதல்வேண்டும்.

ஊர், பேர், முதலிய விலாசங்களில்லாது அனுப்பப்படும் கடிதங்கள் பிரசுரிக்கப்படமாட்டா.

பிரசுரிக்கப்படத் தகாதவைகளாகக் காணப்படும் கடிதங்களை திருப்பி யனுப்பப்படமாட்டாது.

இயன்றவரையில் தேசக்ஷேமத்திற்கும், அறிவுவிருத்திக்குமுரிய நல்விஷயங்களை எழுதியனுப்பி நன்மையடையுமாறு நண்பர்களையிருகியும் வேண்டிக்கொள்ளுகின்றேம்.

நோட்டிஸ்.

(:o:)

கனவான்களே,

அடியில கைவொப்பமிட்டிருக்கிற என்னிடத்தில விலைசலையும், நிறுசன் ரோட்டமாயும், கழுத்துருளைத்தாகவும் கிடைக்கும். ஜரிகை வேலைபாடு செய்த பீதாம்பரசேலைகள், டை 10+6 செட்டுகள் 7, 8-முழக் குழந்தைகள் பச்சாறு, சுவுக்கம், உறுமால வேண்டிய இலைகளும், [illegible], குழந்தைகள் விளையாடும் பிள்ளை விளையாட்டுச்சாமான், [illegible] மாலைகள் [illegible], சான்பூர் போர்வைகள் இவைகளெல்லாம் ஆர்டர்படி சப்ளை செய்யப்படும். இன்னும் காசியில் கிடைக்கக்கூடிய சகல சாமான்களும் ஆர்டர்படி சப்ளை செய்யப்படும். கூடிய சீக்கிரத்தில விலைஜாபிதா வெளியாகும்,

இப்படிக்கு
தங்கள் அப்பன்,
சர்மா அண்டுகோ
அனுமான் காட்
ஸ்ரீகாசி.

விளம்பரங்கள்.

அசாதிரோகங்களுக்கும் பிரதிக்ஷ ஔவுஷதம்.

கஸ்தூரித் திராவகம்.

இந்தத்திராவகத்தில் ஒருநேரத்துக்கு மூன்று சொட்டுவீதம்ஒருஒயின்கிளாஸ் தண்ணீரில்விட்டுக் காலை, மாலை இரவுபடுக்கும்நேரம் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட சீரழிவினால் தாங்கமுடியாத வருத்தத்தை மூன்றுநாளையில் சுகமாக்கும். ச0 நாள் மருந்துசாப்பிட்டால் வியாதிகள்முழுச் சொஸ்தமாகும். தருணவயசுடையவர்கட்கு இதமாயும் சேர்த்தியான திராவகம். இதன்விலை அரை அவுன்சுக்கு ரூபா 10. இதற்குக்குறைந்து அனுப்பப்படமாட்டாது. தபாற்செலவு பிரத்தியேகம்.

துஜஜிபங்க தைலம்

இதன்சிறந்தகுணத்தை இங்குவிரிப்பின் மிகுமாகு மாதலால் எனனிடத்தில் நேரிலாவது கடிதமூலமாயாவது விபரமறிந்துகொள்ளவும். ஒரு அவுன்சு தைலத்தின் விலை ரூபா உ. தபாற்செலவுபிரத்தியேகம்.

வீரியஸ்தம்பனக் குளிகை.

ஆச்சரியம்! மிக்க ஆச்சரியம்!! ரோகமற்றவர்களுக்கு ஒருகுளிகையில்தெரியும். இதைப்பற்றி அதிகமாகச் சொல்லத்தேவையில்லை. உ குளிகைக்குக்குறைய அனுப்பப்படமாட்டா. பரீட்சித்தவர்களே இதன்சுகத்தை அனுபவிப்பார்கள். கஉ. குளிகையின்விலை ரூபா உ. தபாற்செலவு அணா ச. இதன்குணத்தையும் என்னிடத்தில் காயிதமூலமாயாவது நேரிலாவது விபரமறிந்துகொள்ளவும்.

—கெங்காதரதைலம்—பக்க வாய்வுக்குக் கைகண்ட உண்மையான மருந்து இதன்விலை ஒரு அவுன்சுக்கு ரூபா ரு.

—மகாநாராயண தைலம்—வாய்வுகள் கபாலபீனிசம் முதலானதுக்கு கைகண்டது. ஒருஅவுன்சுக்கு ரூபா க. மேற்கண்ட மருந்துகளுக்குத் தபாற்செலவு பிரத்தியேகம்.

காமவிலாசலேகியம அல்லது சாலாமிஸ்ரிலேகியம.

இந்தலேகியத்தை யான் அநேகபிரபுக்களுக்குச்செய்துகொடுத்துப் பலவியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள்மனமகிழ்ந்து வெகுமதிகளையுங்கொடுத்திருக்கிறார்கள். இதைநான் விளம்பரத்தில் லோக நன்மைக்காக பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் நன்மை சுகம் முதலியவைகளை அடையும்படி பொதுஜனநலத்தைக்கருதியே இப்பொழுதே இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரீ குங்குமப்பூ சிலாஜித் கஸ்தூரி குமாஸ்தகா பீதாறு சாலாமுஸ்லி சப்பேத்முஸ்லி பிஸ்தாஸ் சாரப்பருப்பு பாதம்பருப்புசாதாவாரி சீர்முள்ளிவிதைசாகப்பூ வங்கபஸ்பம் அபரகபஸ்பம்பவளபஸ்பம் வெள்ளிபஸ்பம் அயகாந்தசெந்தூரம் சாம்பிராணிப்பதங்கம் இன்னுமநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச்செய்யப்பட்டிருக்கிறது: இதனால் நீரழிவு வெள்ளை நீமாவு சுண்ணாம்பு கரைத்ததுபோல் வெள்ளையாய்ப்போகுதல் நீர்க்கடுப்பு நீரடைப்பு மூலச்சூடு ஒருவருஷத்தன உண்டாயிருக்கும் பக்க வாய்வு இருமல் காசம் பித்தகாமாலை பித்தபாண்டு பீனிசம் கைகால் காந்தவலி இடுப்புவலி பக்கவாய்வு சூலவாய்வு இன்னும் அநேககடுமையான வியாதிகள் நீரும். ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால் ருதுகாய்வு பிரசவ அறையில் உண்டாகும் பலநோய்கள் நீங்கி தேக புஷ்டியையும் பலத்தையும் தரும் பாலைவிருத்திசெய்யும்.

சிலர் சூதணம் லேகியங்களால் சகலநோயுந்தீர்ந்து அ0 வயதுள்ள முதியோரை யௌவனர்களாக்குமென்றும் சந்தான மில்லாதஸ்திரிகள் கற்பிணியாவார்களென்றும் பலவாறு வீணகாரியங்களைப் பிதற்றித்திரிகிறார்கள். அவ்விதம்பிதற்றவும் பொய்சொல்லவும் என்மனச்சாட்சி எனக்கு இடங்கொடுக்கிறதில்லை- ஆனால் கர்ப்பந்தரிப்பதற்குத்தகுந்த அவிஷதம்என்னிடமுண்டு. இஷ்டமுள்ளவர்கள் ஆகியோடந்தமாய் அப்பேர்ப்பட்ட ஸ்திரிகளின் தேகக்குணத்தை தெரிவித்து ஔஷதத்திற்கு வேண்டிய பணமுஞ் செலவளிப்பார்களாகில் நான் ஔஷதப்பிரயோகஞ் செய்யக்கூடும். இதைப்புருஷர்கள் பெரிய களாச்சிக்காய்ப்பிரமாணமும் ஸ்திரிகள் சிறியகளாச்சிக்காய்ப்பிரமாணமும் புதிய வியாதிகளுக்கு உக நாளும் பழையவியாதிகளுக்கு சஉ-நாளும அந்தவியாதிகளுக்கு மருந்து எடுக்கப்படும்போது நம்மால் தெரிவிக்கப்படுமனுபானத்துடன் சாப்பிடவேண்டும் விலை இறாத்தலொன்றுக்கு ரூபா உ0கால் றாத்தலுக்குக்குறைந்த அனுப்பப்படமாட்டாது. புருஷர்களுக்கு ச0 நாளைக்கு ஒரு றாத்தல்போதுமானது. ஸ்திரீகட்கு முக்கால் றாத்தல் இதுசாப்பிடுவதற்கு வெகு இன்பமும் குணமுமாயிருக்கும். இதில்லாகிரியேகிடையாது. எடுக்க இஷ்டமுள்ளவர்கள் வியாதியின்விபரத்தைக் கடிதமூலமாய்த் தெரிவித்து அத்துடன் அ அணா ஸ்டாம்பும் அனுப்பவேண்டியது- அல்லாவிட்டால் லேகியம் அனுப்பப்படமாட்டாது.

மிருத்துசிவண அல்லது கஸ்தூரி மாத்திரை.

எட்டுவிதமான சுரத்திற்கும் அசுத்தசலத்தினால் கொசுகு முதலான விஷஜெந்துக்களினாலுண்டாகும் மலேரியா ஆகிய விஷக்காச்சல்களுக்கும் பலவிதமான சன்னிக்கும் இதில் ஒரு மாத்திரையை இஞ்சிஞ்சிச்சாற்றி லுரைத்துச் சாப்பிட்டால எப்பேர்ப்பட்டசன்னியும ஒரு அல்லது இருவேளை மருந்திற்சுகப்படும். எழுவேளை சாப்பிட்டால் சன்னி காச்சல் சுரம் முதலியன சுத்தமாய் சுகமாகும் கஉ-குளிகையின் விலை ரூபா உ.

காமனீமது பஞ்சனீ மாத்திரை.

இதுதங்கம் அப்ரகபஸ்பம் கஸதூரி குங்குமப்பூ லிங்கசெந்தூரம் முதலியவிலையுயர்ந்தமருந்துகள் சேர்த்துச்செய்யப்பட்டுத் தயாராயிருக்கிறது. இதன்சொற்பகுணத்தை மட்டுமகாட்டுகிறேன். சீனிவுகாசம்.இருமல் ஈளைநீராதாரரோகம்பிரமேகம்மூலச்சூடு புதிதாய்க்காணும் பக்க வாதம் வெள்ளை முதலியவியாதிகள் நீந்துதாதுபுஷ்டி வுண்டாகும் மூன்றுநாளில் நல்லகுணம் தெரியும் சச நாளில் வியாதி பூரணசுத்தமாகும். காலைமாலை கச-நாட் சாப்பிடக்கூடிய உஅ-மாத்திரைகளின்விலை ரூபா இ. சச-நாள் சாப்பிடக்கூடிய அஅ-மாத்திரைகள் ரூபா கரு-க்குக் கொடுக்கப்படும். தபாற்செலவு பிரத்தியேகம்.

சந்திரிகா பிரதம மாத்திரை.

இந்தமாத்திரை காசம் பவுத்திரம் பக்கவாய்வு பித்தபாண்டு வெள்ளை நீர்க்கடுப்பு நீரடைப்பு பீனசகபாலம் துர்வியாதிகளாலுண்டான நோய்களை யெல்லாந் தீர்க்கும் இம மாத்திரையை உக-நாள் சாப்பிட்டால் பூரணசுகமுண்டாகும். மருந்தெடுக்கும்போது வியாதிக்கேற்ற அனுபானந் தெரிவிப்போம். சச-குளிகையின் விலை ரூபா மூன்றரை.

புத்தகங்கள்.

பின்னுற காட்டப்படும் அருமையான புத்தகங்கள் மாறுடர் எவரும் இகபர நன்மைகளைக்கருதி அவைகளை கைப்பற்றிக்கொள்ளக்கடமையிருந்தால் இவ்விஷயங்களுக்கும் குருவைப்போல் போதிக்கக்கூடிய மெத்த அருமையான புத்தகங்களானதால் ஒவ்வொருவரும் இவைகளைசகட்டாயம வாங்கி வாசிக்கவேண்டியது.

க கோகசாஸ்திரம் மாயின்கட்டு ஒருபிரதி ரூபா ங.
உ ,, கலிகோககட்டு ,, ச.
ங கைத்தொழிற்போதினி மாயின்கட்டு
கஇ. கலிக்கோ ,, ரூபா உ.
ச. பூர்வாகௌஷதரோபகாரி வாணவேடிக்கைகண்டங்கிய பஞ்சாம்சஞ்சிகை ஒன்று அணா க0.
ரு அநேக இங்கிலீஷ் சாமான்க ளடங்கிய ஒன்பதாஞ் சஞ்சிகை ஒன்றுக்கு அணா கஉ.
சா பிரதாபனல சரித்திரம்ஒன்றுக்கு அணா அ
எ சிப்பு சாய்பு சரித்திரம் அணா கஉ.
அ மேற்படிசரித்திரமும சோகனலால்சரித்திரமும ஒரேகட்டிட மொன்றுக்கு அணா உ0
கூ ருசிய ஜப்பானியயுத்தம்இருபகுதிகள் ரூ க.
க0 ரசமணிசெய்யும்புத்தகம்(அபகய) ரூ கஇ.

மேற்காட்டிய புத்தகங்கள் வேண்டுவோர்களுக்குத் தாமசமின்றித்தாக்கிரதையோடு அனுப்பப்படும் தபாலில் வேண்டுவோர்க்குத் தபாற்செலவு பிரத்தியேகம். மற்றவிபரங்கட்கு கார்ட்லாக்கை எழுதிப்பார்க்கவும். இனமாக அனுப்பலாம் ஒருமுறை இப்பொருட்களை வாங்கித் தன்முமமகிழ்வை யடையுங்கள்.

எமதுவிலாசம
மகாராஜ கெங்காபிரசாத் பண்டிதர்
மருதானை முதனாமடிவிசன் நம்பர்- 98
கொழும்பு.

பலத்தைக்கொடுக்கும் மருந்துகளில்
பழனி ஆர். எம. கே.

தங்கமாத்திரை.

இது ஒன்றுதான் திவ்ய ஔஷதம்.
ஆச்சரியமானகுணம்!
மிக்க இன்பமான சுகம்!!

தேகபுஷ்டிக்கு இதுசிகரற்றமருந்து! இதற்குநிகரானமருந்து ஒன்றுமில்லை- ஒரேகுளிகையில் பரீக்ஷைபார்க்கலாம் பலஹீனம் சக்திக்குறைவு முதலியவைகளை நீக்கும், நரம்புகளைப் பலப்படுத்தி, தேகத்திற்கு வலுவைக்கொடுக்கும். அதிகவயதாலும் பலஹீனத்தாலும் நேரிட்ட சகலவித சோர்வு சக்திக்குறைவு, பலஹீனம், ஊக்கக்குறைவு முதலியவைகளை நீக்கித் தேகக்கட்டை உறுதிப்படுத்தி, ஊக்கத்தைக்கொடுத்து சாதுபுஷ்டியை உண்டாக்குவதில் இதற்குமிஞ்சின அவுஷதமில்லை பரீக்ஷிக்கும் பலனுக்கும் உத்தரவாதம் 60 பில்ஸ் ரூபா 10 24, பில்ஸ்ரூபா 4- மாதிரிக்கு 12-பில்ஸ் ரூபா 2. 6-பில்ஸ் ரூபா I,

10 ரூபாவுக்கு எழுதினால் மிக இன்பமானவாசனையுடைய கூந்தல் தைலம் I-ரூபா விலையுள்ள புட்டி 1-ம் 5-ரூபாவுக்கு டிை அரைப்புட்டி 1-ம் இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும்

பற்பொடி.

பொறுக்கமுடியாத பல்வலியை ஒருநொடியில் நிறுத்தும் பல் அசைவு, பல் ஆட்டம், எகிர்சுவு, எகிர் வீக்கம், வலி, பல்புழுக்குடைச்சல், இரத்தம் வடிதல், வாய்நாற்றம், பல்கூச்சம் இவைகளை உடனே நீக்கும் இதைவிடாது பல்துலக்கிவந்தால் கண்டிப்பாய்ப் பற்களைக் கெட்டிப்படுத்தி ஆயுஸ்பரியந்தம் தந்தரோகம் அணுகவொட்டாது புட்டி அணா ச ங-புட்டி அணா க ச-புட்டி க-உ-0 சார்ஜ் இ-அணா. க-டஜன் ரூபா உச-0 , சார்ஜ் இனும்

ஆர். எம். கே. வேலுசாமி,
பழனி.

விளம்பரம்.

டைனமைற் வெடி-

என்னிடத்தில்திறமான சமுதுமார்க்குபோட்டடைனமெற்வெடிவிலைக்கிருக்கிறது,விருப்பமுள்ளவர்கள் என்னிடத்தில்வந்து விலைவிபரம்முதலியவற்றை அறிந்துகொள்ளவும்.

இங்ஙனம்
த. சின்னத்தம்பி
டைனமெற்வெடி வியாபாரி
திருநெல்வேலி கிழக்கு
யாழ்ப்பாணம்.

பரிசுத்தமான தேன்.

நாடுகளிலிருந்து ஸ்பெஷலாய் எங்களால் நியமிக்கப்பட்ட வேலைக்காரர்களால் சேகரிக்கப்பட்டது. கடைகளில் விற்கும் வெல்லப்பாகை கலந்த தண்ணீர் போன்ற தேனல்ல. இத்தேன் மிகவும் தடிப்பாகவும், திக்காகவும், சுத்தமாகவும் இருக்கும். கலப்பில்லாத அப்பட்டமான சரக்கு. மேலும் வைத்திய சாஸதிர முறைப்படிக்கு எங்களால் சுத்தியும் செய்யப்பட்டு விற்கப்படுகிறது கடைகளில் விற்கும் தேன் ஒருசேர்சேர்க்குமிடத்தில் நம்மால் விற்கப்படும் தேன் ச துளிகள் உபயோகித்தால் போதுமானது. இப்படிப்பட்ட மேலானவும், சுத்தமானவும், சுயமானவும் சரக்கு கிடைப்பது அரிது. மருந்துகளை இத் தேனுடன் அனுபானித்து உட்கொண்டால் மருந்துகளின் வீரியமும், குணமும் அதிகரிக்கச் செய்யும்.

விலை டின் க-க்கு அணா கஉ. ஒன்று அல்லது இரண்டுடின்கள் வரையில் அனுப்ப வி. பி செலவு அணா இபிரத்தியேகம்.

பி. சுப்பராய்,
ஆயுர்வேத அவுஷதசாலை,
தஞ்சாவூர்.

தயவுசெய்து,
இதை தங்கள் சிநேகிதர்களுக்கு
வாசிக்கக்காண்பியுங்கள்.

P. சுப்ராயின்

அபூர்வ ஆயுர்வேதஔஷதங்கள்

கஸ்தூரிகலந்த லாவண்டர் வாட்டர்—எங்களுடைய அவுஷதசாலையில் தயாராக்கப்பட்ட மிகவும் சுகந்ததிரவியம். சீமையிலிருந்து வரவழைத்து விற்கிற வஸ்து வல்ல. எப்பேர்க்கொத்தவர்களையும் மயக்கக்கூடிய சுவாசனை. வஸ்திரங்களுக்கு உபயோகித்தால், இன்பமான சுகந்தத்தைத் தரும், இந்தச் சுகந்தத்தை ச துளிகள் உபயோகிதால், கடைகளில் சாதாரணமாக விற்கும் லாவண்டர் வாட்டரை உ0 துளிகள் உபயோகித்தால் எம்மாதிரியான சுகந்த மிருக்குமோ அதைவிட ஜாஸ்தியாக எம்முடைய லாவண்டர்வாட்டர் மனோரம்மியமான சுவாசனையை வீசும் உபயோகித்தவர்களைச் சுற்றி வெகுநேரம் பரிசுத்தமான பரிமளத்தைப் பரவச்செய்யும் அரைஅவுன்சுசீசாக்களில் விற்கப்படுகிறது. விலை சீசா க-க்கு அணா அ வி. பி. செலவு க, முதல் ரு சீசாக்கள்வரையில் அணா இ பிரத்தியேகம்.

ஓதிகோலோன்—இது சீமையிலிருந்து வரவழைத்ததல்ல எங்களுடைய அவுஷதசாலையில் எங்களால்சுயமாகத்தயாராக்கப்பட்டது. மனக்களிப்பையுண்டாக்கக்கூடிய சுவாசனை உடம்பில் பூசலாம் வஸ்திரங்களுக்குபோடலாம, இதைஉபயோகித்தால் தலைவலிகுணமாகும், தேகசிரமத்தை ஆற்றும். வெகுநேரம் வாசனைதங்கி உபயோகித்தவர்களை சுற்றி சுவாசனை பரவியிருக்கும சாதாரணமாய் தண்ணீர்கலந்து கடைகளில்விற்கும் சரக்கைப்போல் இல்லாமல் இது சுயமான வாசனைகலவை. கடைகளில் விற்கும் ஓதிகோலோன் ச0 துளிகள் உபயோகிக்குமிடத்தில் எம்மால்செய்து விற்றுவரும் டீ-ஓதிகோலோனை உ துளிகள் உபயோகித்தால் போதுமானது. அரை அவின்சு சீசாக்களிலவிற்கப்படுகிறது. விலை சீசா க-க்கு அணா எட்டு. வி. பி செலவு ஒன்றுமுதல் சு சீசாக்கள்வரையில் அணா இ பிரத்தியேகம.

உரைந்தவாசனைப்பில்லைகள்—உரைந்தகுலாப் உரைந்தமோதியா உரைந்தலவண்டர்களாகிய ங தினிசுகள் உடுப்புகளுக்குப் போடக்கூடிய உசிதமானவாசனை திநுசுக்கு டப்பா க-க்கு அணா அ. வி, பி செலவு க—முதல் சு டப்பாக்கள் வரையில் அணா இ பிரத்தியேகம,

உடுப்புகளுக்குப்போடும் சுவாசனைத்திரவியங்கள் மனமோகினி,மனோரஞ்சன், ஜெகமோகினி மதனவிலாசம், அக்பாசிரூய், ஷாஜிஹான்சிரூய் என சு வகையான வாசனைகளிருக்கின்றன. இவைகளில் ஒவ்வொன்றும் இப்பொழுதே மலர்ந்த புஸ்பங்களின் சுவாசனையுடையவைகள், வகை க-க்கு அணா அ. வி. பி. செலவு க முதல் சு சீசாக்கள் வரையில் அணா இ பிரத்தியேகம.

கேசர் பவுடர்:—இது ஓர்விதமான விலைபெற்றசுகந்தகலவை. இதில் கொஞ்சமெடுத்து தண்ணீரில் கலந்தாவது, அல்லது கொஞ்சம் சந்தனத்திற கலந்தாவது தேகத்திறபூசினால் எல்லாராலும புகழத்தக்க பரிமளத்தை தரும. கலியாணம் முதலிய சுபகாரியங்களுக்கு இதை அவசியம் உபயோகிக்கவேண்டியது. இதன் இன்பமான சுகந்தம் அநுபோகித்தவர்களுக்குத்தான் தெரியும். சந்தனத்துடன் மனோரம்மியமான இச்சிரேஷ்டமான கலவையைச் சேர்த்துக்கொண்டால, சந்தனத்தில் அத்தர், பன்னீர், குங்குமப்பூ, முதலிய வாசனைகள் சேர்க்கவேண்டியதனுவசியம். சீசா க-க்கு விலை அணா அ. ஒன்றுமுதல் சு சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய செலவுகள் அணா இ பிரத்தியேகம்.

அரகஜா:—இது மற்றொரு விதமான திவ்யமான சுகந்தகலவை. இதைத் தனியாகவாவது, சந்தனத்துடனாவது உபயோகிக்கலாம். தேகத்தில் பூசிக்கொள்ளலாம- உடுப்புகளுக்குப்போடலாம். அதி உன்னதமான வாசனை. இதன் திவ்யமான பரிமளத்தைச் சகித்தறிந்தவர்களால் மிகவும் புகழப்படுகிறது. ஒருதடவை பூசினபிறகு பிரதிதினம் ஸ்நானம் செய்தாலும் கூ-நாள் பரியந்தம் இதன் இன்பமான பரிமளம் தேகத்தில் தங்கி நிற்கும். விலை டப்பா க-க்கு அணா அ ஒன்றுமுதல் கஉ டப்பாக்கள் வரையில அனுப்ப வி, பி. முதலிய செலவுகள் அணா இ பிரத்தியேகம்.

அம்பர்—இந்தச் சுகந்தத்தில கொஞ்சமெடுத்து உடுப்புகளுக்குப்போடலாம். தேகத்திற்கும் பூசலாம். முகத்தில்த் தடவிவந்தால பருக்கள் கறுப்பு பளிகள், மேகப்படர், மாசு, அரிப்பு முதலியதுகளை நீக்கி முகத்திற்கு வசீகரத்தைத்தரும். வெற்றிலையில்த் தடவி தாம்பூலத்துடன் உபயோகித்தால் மிக்க மனோஉற்சாகத்தைத் தரும். கொஞ்சமெடுத்து வெந்நீரில்க் கலந்து ஸ்நானம் செய்தால், வெள்ளிரெல்லாம் சுகந்த பன்னீர் வாசனையுள்ளதாகும். மனக்களிப்பை யுண்டாக்கி தேகசிரமத்தையாற்றும். விலை டப்பா க-க்கு அணா அ க, முதல் கஉ டப்பாக்கள்வரையில அனுப்ப வி. பி. முதலிய செலவுகள் அணா இ பிரத்தியேகம்.

இந்தியன் பெட்டல் டஸ்டு—அதி மனோரம்மியமான சுகந்தகலவை பொட்டலம். உடுப்புப்பெட்டிகளில் வைத்திருந்தால் உடைகளுக்கு மிகவும் உன்னதமான சுவாசனை ஏற்றுவது மன்றி வண்டு முதலிய பூச்சிகள் துணிகளில் அணுகாமல் காக்கும். இதன் இன்பமான சுகந்தம் நெடுநாள்நிற்கும். பொட்டலம் க-க்கு விலை அணா ச. க, முதல் கஉ பொட்டலங்கள்வரையில் அனுப்ப வி. பி. செலவுகள் அணா இ பிரத்தியேகம்.

உடுப்புகளுக்கு விலாசம் போடும் அழியாதமை அல்லது இங்கி—இது பருத்தி, கம்பளி, பட்டு முதலிய வஸ்திரங்களில் எவ்வளவு தடவை வஸ்திரங்களைத் துவைத்தாலும் அல்லது வெளுத்தாலும், விலாசம் எக்காலத்திலும் அழியாது. இந்தமையினால் விலாசம் போட்டால் உடுப்புகளை திருடிப்போகாமலும்,மாற்றுப்படாமலும் காக்கும். விலை சீசா க—க்கு அணா அ,வி. பி. செலவுகள் க முதல்சுசீசாக்கள்வரையில்அணா இ பிரத்தியேகம.

சர்க்கரையின் பில்லைகள்—சற்கரையைவிட இ00 மடங்கு தித்திப்பு ஜாஸ்தியாயுள்ள சற்கரையின் என்ற இந்தவஸ்து சிறுபில்லைகளாக எமக்காக ஸ்பெஷலாக சீமையிலிருந்து தயாராக்கப்பட்டு, தருவித்து விற்கப்பட்டு வருகிறது. ஒருசேர் பால் அல்லது காபி அல்லது தேயிலைக்கு ஒன்று அல்லது இரண்டு பில்லைகள் உபயோகித்தால் ஒருபிடி சற்கரையை உபயோகித்தால் எவ்வளவு மதுரமும் இனிப்பு மிருக்குமோ, அவ்வளவு தித்திப்பைத்தரும். சற்கரையையே உபயோகிக்கக்கூடாத மதுமூத்திரரோகிகளுக்கும்; சற்கரையை உபயோகிப்பதினால் மதுமூத்திரம் வந்துவிடுமென்று அச்சப்படுகிறவர்களுக்கும் "சற்கரையின்" மிகவும் உபயோகமுள்ள வஸ்து. சற்கரையைவிட விலை சரசம். சற்கரையின துர்க்குணத்திற்கு பயந்து அநேகர் சற்கரையில்லாமல் காபி, தேயிலை, பாயாசம்முதலிய பானங்கள் சாப்பிடுவதுண்டு அப்பேர்க்கொத்தவர்களுக்கு "சற்கரையின்" உபயோகம் இவ்வளவுதான் என்று கணக்கிடமுடியாது. விலை சீசா க-க்கு அணா அ. வி. ப. செலவு க, முதல் கஉ சீசாக்கள்வரையில் அனுப்ப அணா இ பிரத்தியேகம.

அக்கினிமாந்தத்திற்குமருந்து—ருசியின்மை, புளித்த ஏப்பம், நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வயிற்றுவலி, வாய்நாற்றம், அஜீரணம, வயிற்று பிசம், நித்திரையில்லாமை, பித்த உபத்திரவங்களை சொஸ்தப்படுத்தும. பசி தீபனமும், தேகஆரோக்கியமும் தரும். டப்பா க-க்கு அணா அ. வி. பி. செலவு க, அல்லது உ டப்பாக்கள் வரையில் அணா இ பிரத்தியேகம்

பிரமேக நிவாரணி—எந்தக் காரணத்தினால் உண்டாயிருக்கும் மேகவெள்ளை, வெட்டை, நீர்குற்றல், நீர்தாரை எரிவு, சீழ், ரத்தம வடிதல், முதலிய வியாதிகளை ஆண் பெண் இருபாலார்களுக்கும் சொஸ்தப்படுத்தும. சீசா க-க்கு விலை ரூபா க, வி. பி. செலவு க, முதல் சு சீசாக்கள் வரையில அனுப்ப அணா இ பிரத்தியேகம.

லக்ஷ்மீகர கஸ்தூரி மாத்திரை—தாம்பூலம் தரிப்பவர்கள் கையிருப்பி லெப்பொழுதும் வைத்துக்கொள்ளவேண்டிய விலையுயர்ந்த வஸ்து. தந்தநோய், வாய்நாற்றம், அஜீரணம், பித்தவாய்வு, இதுகளை நீக்கும். தாம்பூலத்துடனாவது, தனியாகவாவது; சாப்பிட்டபின் உ மாத்திரைஉபயோகித்தால், எப்பேர்க்கொத்த கனத்த சாப்பாட்டையும் உடனே ஜீரணஞ் செய்வதுடன், வாயில் அநேகமணிநேரம சுகந்த வாசனையிருக்கும். பிரதிதினம் காலையில இரண்டுமாத்திரைகள்சாப்பிட்டால் நீடித்த அக்கினிமாந்தம், மலச்சிக்கல், அஜீரணத்தினாலுண்டாகும் வயிற்றிழிவு, வயிற்றுநோய், நெஞ்செரிச்சல முதலிய பற்பல வியாதிகள் நீரும், பிரசவகாலத்தில் தாம்பூலத்துடன் உபயோகித்துவந்தால், ஜன்னி கிட்ட நாடாது; ஜன்னியில்க்கொடுக்க ஜன்னி நீரும். இதி லாகிரி முதலான அபாயகரமான வஸ்து சேரவில்லை; காஷ்மீர்தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி, தக்கரோச், பச்சைக்கற்பூரம முதலிய அநேக விலைபெற்ற மருந்துச்சாமான்களும், வாசனைத் திரவியங்களும சோததுச் செய்யப்பட்டிருக்கிறது, தாம்பூலத்துடன் உபயோகித்தால் பச்சைக்கற்பூரம் முதலிய வாசனை வஸ்துக்கள் உபயோகிக்கவேண்டியது அனுவசியம், அறை குழந்தைகள் முதல் வயதுசென்றவர்களுக்கு சளி, இருமல், காசம், காலரா, பிளேக், சுரம முதலானவைகளுக்கு வயதுக்கும தேகத்திற்கும் தக்கபடி க, முதல் ச மாத்திரைகள் வரையில் வெற்றிலைச்சாற்றில் கொடுக்கச் சுகமாகும, சீசா க-க்கு விலை அணா ச, இந்தியாவில் க, முதல் கஉ சீசாக்கள் வரையில அனுப்ப பாக்கிங், தபால சார்சு அணா இ-ம சிலோனுக்கு அணா எ-ம் பிரத்தியேகம்,

(குறிப்பு.) இந்த இடங்களில் மலையாளம் தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகள் தெரியாததால் ஆர்டர் செய்கிறவர்கள் தயவு செய்து தமிழிலாவது இங்கிலீஷிலாவது அடியிற்குறித்த விலாசத்துக்கு விவரமாகவும் தெளிவாகவும் எழுதிப் பெற்றுக் கொள்ளக் கோருகிறேன்.

P. சுப்பராய்

ஆயுர்வேத அவுஷதசாலை
ஸ்ரீவெங்கடேசபெருமாள்
கோவில் சன்னதி.
தஞ்சாவூர்.

ஆறிரு தடந்தோள்வாழ்க அறுமுகம் வாழ்கவெற்பைக், கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம்வாழ்கச்செவ்வேள், ஏறியமஞ்ஞைவாழ்கயானைதன்னணங்குவாழ்க, மாறிலாவள்ளிவாழ்க வாழ்கசீரடியரெல்லாம்.

☞ Printed and published by M. S. Manicam pillai for the proprietor at the Sree VaiaMpohyvilasa press Jaffna,